# 8.8 டன் குப்பைகள் அகற்றல்

பெட்டாலிங்ஜெயா, ஏப். 2-
மாநகரின் மையத்தில் ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மானில்அமைக்கப்பட்டிருந்த நோன்புப் பெருநாள் சந்தையின் கடைசி நாளன்று 8.8 டன் குப்பைகளை கோலாலம்பூர் மாநகர மன்றம் (டி.பி.கே.எல்.) அகற்றியது.

நெகிழி, காகிதம், அலுமினியம் ஆகியவற்றை உள்ளடக்கி 250 கிலோ குப்பைகளை மறுசுழற்சி செய்யப்பட்டு விட்டதாக டி.பி.கே.எல். கூறிற்று. அலாம் ஃபுளோரா செண்டிரியான் பெர்ஹாட் ஒத்துழைப்போடு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகவும் சாக்கடைகள் நடைபாதைகள் சுற்றுப்பகுதிகள் ஆகியவை குப்பைகள் அகற்றப்பட்டு சுத்தமாக இருப்பதை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம் என்றும் டி.பி.கே.எல்.தெரிவித்தது.



ரமலான் மாதம் முழுவதும் ஆயிரக்கணக்கான மக்கள் வருகை புரிந்த சந்தை முடிவுக்கு வந்த பின்னர் தூய்மையாக இருப்பதை உறுதிப்படுத்தவே குப்பைகளை அகற்றும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. தூய்மையை பராமரிக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது என்று அது கூறிற்று.